விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 12.47 p.m
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 01.05 p.m

# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, METTUR

Case No :C.C.No.246/2024

Prosecution side witness : அ.சா.2 Date : 12.02.2025

| | |
|---|---|
| Name : சதிஷ் | Taluk : மேட்டூர் |
| Father Name : சம்பு | Calling : வனசரகர் |
| Village : கூடக்கல்காட்டுவளவுபூலாம்பட்டி | Age : 36 |

(Both accused absent. Filed petition and allowed.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேட்டூர் வனசரகம் கோனூர் பீட்டில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவம் நடந்த சமயத்தில் கொளத்தூர் வனச்சோதனை சாவடியில் வனக்காப்பாளராக பணிபுரிந்தேன். 22.01.2024–ம் தேதி இரவு 8.00 மணியளவில் வனசரக அலுவலர் திரு.சுரேஷ்குமார் என்பவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி கருங்கல்லூர் கிராமம் மூலக்கொட்டாய் பகுதியை சேர்ந்த மகேந்திரன் என்பவர் கருங்காலி கட்டைகளை திருட்டு தனமாக அவருடைய சகோதரி ஈஸ்வரி என்பவரின் வீட்டின் அருகே உள்ள நிலத்தில் பதுக்கி வைத்து TN 93 C 5213 என்ற வாகன எண் கொண்ட Bolero ஜீப்பில் விற்பனைக்காக எடுத்துச்செல்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் திரு.சுரேஷ்குமார் வனச்சரக அலுவலர் தலைமையில் நானும், என்னுடன் பணிபுரியும் வனக்காப்பாளர் திரு.பத்ரன், திரு.நல்லதம்பி, திரு.கோகுல்கண்ணன் ஆகியோர்கள் குழுவாக சென்று மகேந்திரனின் அக்கா ஈஸ்வரி வீட்டின் அருகே சோதனை செய்து பார்த்தோம்.

2) அப்போது கருங்காலி கட்டைகளை தூள் செய்தும், கட்டைகளாகவும் பாலீத்தீன் கவர் போட்டு மூடிவைத்திருந்ததை கண்டுபிடித்தோம். அப்பொழுது அங்கிருந்த வீட்டின் உரிமையாளர் ஈஸ்வரி மற்றும் அவரமு மருமகள் கண்ணம்மா ஆகியோர்களிடம் எங்களுடைய உயர் அதிகாரி திரு.சுரேஷ்குமார் விசாரணை நடத்தினார். அதன் பேரில் அவர்கள் இருவரும் கருங்காலி கட்டைகள் மகேந்திரன் என்பவருடையது என்றும், அவர் தான் விற்பனைக்காக இங்கு பதுக்கி வைத்திருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

3) மகேந்திரனுக்கு செல்போன் மூலம் தொடர்பு கொண்டு சம்பவயிடத்திற்கு வரும்படி கூறினோம். வெகுநேரம் ஆகியும் அவர் வரவில்லை. வனச்சரக அலுவலர் திரு.சுரேஷ்குமார் உடனே கருங்கல்லூர் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் தெரிவித்தார். அப்பொழுது வெள்ளை நிற Bolero Jeep–ல் வந்த கருங்கல்லூர் முன்னால் பஞ்சாயத்து தலைவர் திரு.சின்னப்பன் என்ன விசயம் என்று வந்து விசாரித்தார். அவரிடம் விவரங்களை எடுத்து கூறினோம்.

4) அப்போது அவர் மதுபோதையில் இருந்ததார். இது எல்லாம் ஒரு பெரிய தப்பு கிடையாது. உடனே இங்கிருந்து கிளம்புங்கள் என்று கூறினார். அதற்கு வனச்சரக அலுவலர் திரு.சுரேஷ்குமார் மகேந்திரன் இங்கு வருவதாக கூறியுள்ளார். அவர் வந்த பின்பு அவரிடம் விசாரணை செய்து இந்த கருங்காலி கட்டைகளை வனச்சரக அலுவலகத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டும் என்று கூறினார். அதற்கு எதிரி சின்னப்பன் அது எல்லாம் எடுத்து செல்ல முடியாது. இங்கு ஒரு மயிரும் புடுங்க முடியாது என்றும், உடனடியாக இங்கிருந்து செல்லவில்லை என்றால் யாரும் உயிருடன் செல்லமுடியாது என்று கூறினார். கருங்காலி

கட்டையின் மீது கை வைத்து பாருங்கள் என்றும், மிரட்டும் விதத்தில் எங்களை அரசு பணி செய்யவிடாமல் தடுத்தார்.

5) அப்போது அவருடன் வந்திருந்த Bolero Jeep டிரைவர் கருங்கல்லூர், காளையனூரை சேர்ந்த வினோத்குமார் இந்த தேவிடியா பசங்கள சும்மா விடக்கூடாது என்றும், இன்னும் கொஞ்ச நேரம் நீங்க இங்கு இருந்தா யாரும் உயிரோடு செல்லமாட்டீங்க என்றும் தகாத வார்த்தையால் திட்டியும், எங்களை கொலை மிரட்டல் விடுத்தும், எங்கள் அரசு பணியை செய்யவிடாமல் தடுத்தார்.

6) வனச்சரக அலுவலர் திரு.சுரேஷ்குமார் அவர்கள் வனத்துறை மாவட்ட அதிகாரிகளுக்கும், காவல் துறையினருக்கும் தகவல் அளித்தார். அப்பொழுது அதற்கு சின்னப்பன் இங்க போலீஸ் வந்தாலும் ஒன்னும் புடுங்க முடியாது என்று கூறிவிட்டு Bolero Jeep–யை எடுத்துக்கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டார். அதன் பின்பு கொளத்தூர் காவல்நிலையத்திலிருந்து போலீசார் வந்து விசாரணை செய்து கருங்காலி கட்டைகளை போலீசார் பாதுக்காப்புடன் மேட்டூர் வனச்சரக அலுவலகத்திற்கு எடுத்து வந்தோம். எங்களை பணி செய்யவிடாமல் தடுத்த எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். இது சம்மந்தமாக வனச்சரக அலுவலருடன், போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.</u>**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**